# சீவகசிந்தாமணி வழக்காறு அடையாளங்கள்

## Seevaga Chinthamani Litigator Signs

**கீர்த்தனா. து**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி.

கலை அறிவியல் கல்லூரி, கோவை

**Keerthana.D**, Assistant professor, Department of Tamil,

Dr.NGP Arts and Science College, Coimbatore

ORCID ID: https://orcid.org/0009-0001-1151-984X

DOI: 10.5281/zenodo.13955140

**Abstract**

There is no doubt that the ancient Tamil society has been and continues to function with cultural patterns. Culture is the history of a race, food patterns, beliefs, customs, etc. It can be said that the signs are suppressed. The sign that conveys an idea is called a symbol. Such a symbol is also considered as a kind of culture. In Seevaga Chinthamani the study is to investigate the beliefs of the people of that time such as munnam and worshiping the deity, the custom of giving gold as a dowry for the marrying the women in the society and about custom of tribes in the society.

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழ் சமூகமானது பண்பாடு முறைகளை கொண்டே இயங்கி வருவனவாகவே இருந்துள்ளது,இன்றளவும் தொடர்ந்து இயங்கி வருகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பண்பாடு என்பது ஒரு இனத்தின் வரலாறு, உணவு முறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்ற வழக்காறு அடையாளங்களை அடக்கி உள்ளது எனலாம்.ஒரு கருத்தைத் தெரிவிக்கும் அடையாளம் குறியீடு எனப்படும். இவ்வாறான குறியீடும் ஓர் வகையான பண்பாடாக கருத்தப்படுகிறது.சீவகசிந்தாமணி கோவிந்தையார் இலம்பகத்தில் முன்னம், தெய்வத்தை வணங்குதல் போன்ற அக்கால மக்களின் நம்பிக்கைகளையும்,குலம், பெண் வீட்டார் பெண்ணை திருமணமும் செய்து கொடுத்தும் பிறகு வரதட்சனையாக பொன்னும் கொடுக்கும் பழக்க வழக்க இருந்தமை குறித்து ஆராய்வதே இவ்வாய்வாகும்.

**முன்னுரை**

ஒரு நாகரிகம் வளர்ச்சியடைய பழக்க வழக்கம் நம்பிக்கை முதலானவை இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது. ஒழுக்கம் தவறாது ஒரு மனிதன் சரியான வழியில் நடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சில நம்பிக்கை முறைகளையும்,

பழக்கவழக்கங்களை கையாண்டு வந்தனர் நம் சமூக மக்கள். ஐம் பெரும் காப்பியகங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணி கோவிந்தையார் இலம்பகத்தில் பயன்படுத்தபட்ட சில பழக்க வழக்க நம்பிக்கைகள் குறித்து எடுத்தியம்புவதே ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

**பழக்க வழக்கம்**

பழக்க வழக்கம் என்பது ஒரு சமுதாயத்தில் தொன்று தொட்டு பின்பற்றக் கூடிய சடங்கு முறைகளை குறிப்பாதாகும். சங்க கால கட்டங்களில் பழக்கம் என்ற சொல் பயன்பாட்டில் இல்லை, ஆனால் பழகி என்ற சொல்லை உபயோகித்து உள்ளனர். பழகி – விரும்பி செய்தல் என்று பொருள். வழக்கம் – தொடர்ந்து செய்தல் என பொருள் படும். வழக்கம் என்ற சொல்லை தொல்காப்பியர்,

“முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை” (தொல்காப்பியம் நூற்பா. 980)

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு வழக்கம் என்ற சொல் தொடர்ந்து பின்பற்றக் கூடிய என்ற பொருளின் அடிப்படையில் அமைகிறது. எனவே, பழக்கவழக்கமானது ஒரு சமூகம் விரும்பி பின்பற்றக் கூடிய சடங்கு முறையாக எடுத்து கொள்ளலாம்.

**நம்பிக்கை**

பழங்காலம் தொட்டே மக்கள் பல வகையான நம்பிக்கைகளை கொண்டு இருந்தன. காகம் கரைவது முதல் தெய்வத்தை வணங்குதல் வரை என பல நம்பிக்கை முறைகளை கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.இந்நம்பிக்கைகள் பற்றி, “ஒவ்வொரு மனிதனும் ஆயிரக்கணக்கான நம்பிக்கைகளின் குவியலாகக் காணப்படுகின்றான். நன்மைத் தேடும் மனிதன் பற்றுக்கோடாக நம்பிக்கை துணைநிற்கின்றது. கடலிலே அகப்பட்டுத் தவிக்கும் ஒருவனுக்குக் கையில் கிடைத்த சிறிய மறக்கட்டையும் தெப்பமாகத் தெரியும். அதுபோல் அலைக்கழிக்கப்படும் மனது, நம்பிக்கைகளைப் பற்றிக்கொள்ளும் பொழுது புத்துணர்ச்சி பெறுகிறது.”

ஒரு மனிதனின் நம்பிக்கையானது மனதினை மகிழ்ச்சியடைய செய்கிறது என்பதனை எப் பாக்கியமேரியின் கூற்று மூலம் அறிய முடிகிறது.

**முன்னம்**

முன்னம் என்றால் குறிப்பு என்று பொருள்படும். இதனை நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கமானது,

**“இன்னார்க் கின்னுழி இன்னது பயக்குமெனும்**
**முன்னம் தருவது முன்ன மாகும்” (அகப் பொருள் விளக்கம்)**

ஏன்று குறிப்பிடுகிறது. திருக்குறளில்,

**“தண்ணற் துறைவன் தணற்தமை நம்மினும்**
**முன்னம் உணர்ந்த வளை” (திருக்குறள்.1277)**

முன்னம் – முன்னர் என்று திருவள்ளுவர் கையாண்டு உள்ளார். தலைவனின்

பிரிவினை உணர்த்தும் வகையில் தலைவியின் கை வளையல்கள் முன்னரே கழன்றன என்பதைக் குறிப்பிடுகின்றன.

பின்னர் நடக்கக்கூடிய நிகழ்வுகளை முன்னரே அறியும்படி கூறுவதாகும். இதனை சீவக சிந்தாமணியில்,

**“சொன்ன வாயுளே ஒருவன் புட்குரல்**

**முன்னம் கூறினான் முது உணர்வினான்” (சீவகசிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம்)**

என்று குறிப்பிடுகிறது.

பறவையின் ஒலிக்குறிப்பினை வைத்து, பின்னர் நடக்கவிருக்கும் நிகழ்வினை முன்னரே கணித்து முதியோன் ஒருவன் கூறினான். இஃது ஒரு வகையான நம்பிக்கையாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**தெய்வத்தை வணங்குதல்**

நல்ல காரியங்கள் செய்ய தொடங்குவதற்கு முன் கடவுளை வழிபட்ட பின்னர் அச்செயலை செய்ய தொடங்குவர். அதேப் போல் சங்க காலத்தில் உள்ள அரசர்கள் போருக்கு செல்வதற்கு முன் தெய்வத்தை வேண்டினால் போரில் நிச்சயம் வெற்றிக் கிடைக்கும் என்ற நம்பிக்கையினை,

**“நீடோனான் வெற்றிகொள்கென**

**நின்ற மண்டை வலனுயரின்**

**கூடரைப் புறங்காணும்**

**கொற்றவை நிலை யுரைத்தன்று“ (புறப்பொருள் வெண்பா மாலை, பாடல் எண். 40)**

கொற்றவையின் சிறப்புகளை கூறி துதித்து, அவளின் அருளினை பெற்று போருக்கு செல்வர் என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது.

**“தொண்ட கப்பறை துடியோடு ஆர்த்துஎழ**

**வீண்டு தெய்வதம் வணங்கி வெல்க” (சீவகசிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம்)**

மேற்குறிப்பிட்ட பாடல் வரிகளின் மூலம் சீவகசிந்தாமணியில் தெய்வத்தை (கொற்றவை) வணங்கியதன் வழி வெற்றிக் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் அவர்கள் ஆநிரைகளை கவரச் சென்றனர்.

**குலம்**

திருமணச்சடங்கு முறைகள் பெரும்பாலும் ஒரு குலம் சார்ந்த பழக்கவழக்கங்களை அடிப்படையாக வைத்தே அமைகின்றன. சங்க காலங்களில் ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை மேற்கொள்வான். அப்படி இரண்டு மூன்று திருமணம் செய்யும் போது முதல் திருமணமானது ஒரே குலத்தை சார்ந்த பெண்ணுடன் தான் இருக்க

வேண்டும் என்பதை,

**"பொன்னிழை மகளிர் ஒவ்வாதவரை**

**முன் புண்ணர்தல் செல்லார்"** **(சீவகசிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம்)**

எனச் சீவக சிந்தாமணி கூறுகிறது. சீவகன் தன் குலம் இல்லாத கோவிந்தையாரை திருமணம் செய்ய மனம் இல்லாமல் தன் நண்பனுக்கு திருமண செய்து வைத்தல் மூலம் குலம் குறித்த பழக்க வழக்கம் இருந்தமையை அறிய முடிகிறது.

**வரதட்சணை**

இந்திய அரசியல் சட்டங்கள் படி வரதட்சனை கொடுப்பதும் குற்றம் பெறுவதும் குற்றம் என கருதப்படுகிறது. ஆனால் இன்றளவும் வரதட்சணை பெரும் பழக்கம் வழக்கமாக இருந்து வருகிறது. காலங்கள் மாற்றினாலும் ஒரு சில பழக்க வழக்கங்கள் மாறுவது இல்லை என்பதை சீவகசிந்தாமணி காப்பியத்தில்,

**"நலத்தகை அவட்கு நாகுஆன் ஆயிரத்து இரட்டி நன்பொன்**

**இலக்கணப் பாவை ஏழும் கொடுத்தனன் போக..."**

**(சீவகசிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம்)**

கோவிந்தையாரை திருமணம் செய்ய கோவிந்தையாரின் தந்தை பதுமுகனுக்கு இளம் பசுக்கள் இரண்டாயிரம் மற்றும் பொன்னால் செய்யப்பட்ட ஏழு பாவைகளும் சீராக (வரதட்சணை) கொடுத்தார்.

**முடிவுரை**

சீவகசிந்தாமணியில் கோவிந்தையார் இலம்பகத்தில் இடம் பெற்று உள்ள பழக்க வழக்கம் நம்பிக்கைகள் விளக்கப்பட்டுள்ளது.அந் நாட்டு மக்கள் பின் பற்றிய நம்பிக்கைகள், சீவகன் பின் பற்றிய குல ஒழுக்கம் போன்றவை தமிழரின் பண்பாடு முறையை எடுத்தியம்ப உதவியது. இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் நாம் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் பழக்க வழக்கம் நம்பிக்கைகள் முதலானவை மாறாத ஒன்றாக இருக்கிறது.

**துணை நூற்பட்டியல்**

1. துரை. ராசாராம், சீவகசிந்தாமணி விளக்கவுரை, முல்லைநிலையம், சென்னை.
2. திரு.கா.நா.கோவிந்தராச முதலியார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
3. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் (பொருளதிகாரம்), கதிர் பதிப்பகம், திருவையாறு.
4. பாக்கியமேரி, தமிழர் பண்பாடும் பயன்பாடும், அநிச்சிமிழப் பதிப்பகம், சென்னை.

5. எஸ்.எஸ்.ஷாஜஹான், திருக்குறள் பரிமேலழகர் உரையுடன், நேஷனல் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

## References

1. Durai.Rasaram, Seevaga Chinthamani vilakka urai, mullai nilayam, Chennai.
2. Thiru.Ka.Na.Govindharasa Mudhaliyar, Thennindiya saiva siddhantha noor pathippu kalagam, Chennai.
3. Sa.Thirunanasamatham, Tholkappiyam Porulathikaram, Kathir Pathipagam, Thiruvaiyaru.
4. Bakiyamary, Tamilar panpadum payanpadum, Anichimila Padhippagam, Chennai.
5. S.S.Shajahan, Thirukkural Parimelazhakar Uraiyudan, National Publications, Chennai.

## தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

**கீர்த்தனா. து, "சீவகசிந்தாமணி வழக்காறு அடையாளங்கள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, இதழ் 4, அக்டோபர் 2024, பக். 32-36

## Cite this Article in English

**Keerthana. D**, "**Seevaga Chinthamani Litigator Signs**" Pulam: International Journal of Tamilology Studies, Vol.4 Issue 4, 0October 2024, pp. 32-36